# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
**ஆணை எண்: 59 /பேரூ/2025**
**நாள் : 25.04.2025**

திரு. மு. திருஞானசம்பந்தம்,
செயல் அலுவலர் (ஓய்வு),
கடலூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
புவனகிரி தேர்வு நிலை பேரூராட்சி,
கடலூர் மாவட்டம். – எதிர் மனுதாரர்

"கடலூர் மாவட்டம், கடலூர் துறைமுகம், நெ.100-A, காமாட்சி அம்மன் கோவில் தெரு என்ற முகவரியை சேர்ந்த திரு. மு. திருஞானசம்பந்தம் என்பவரின் 28.01.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 30.01.2025 அன்று பெறப்பட்டு, 59/பேரூ/2025 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

<u>**ஆணை**</u>

கடலூர் மாவட்டம் கடலூர் துறைமுகம், நெ.100-A, காமாட்சி அம்மன் கோவில் தெரு என்ற முகவரியை சேர்ந்த திரு. மு. திருஞானசம்பந்தம் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:

கடலூர் மாவட்டம், புவனகிரி தேர்வுநிலை பேரூராட்சியில் நான் செயல் அலுவலராக பணி புரிந்த 2017-18, 2018-19, 2019-20 மற்றும் 2020-21 ஆண்டுகளுக்கான தணிக்கை தடையில் நிலுவை காலங்கடந்த வரி மற்றும் வரியில்லாத இனங்கள், (கொரானா காலத்தில் மக்களிடமிருந்து வசூல் செய்ய இயலவில்லை) வசூலிக்க தவறிய செயல் அலுவலர் விகிதாச்சாரம் 20%

அடிப்படையில் ரூ.2,70,788.00 செலுத்தி உள்ளேன். செலுத்துச்சீட்டு எண்.320/2022-23 நாள் 20.01.2023, (2017-18, 2018-19, 2019-20 மற்றும் 2020-21 ஆண்டுகளுக்கான விகிதாசார 20% குறிக்கப்பட்டுள்ளது.

உள்ளாட்சி தணிக்கைத் துறை உதவி இயக்குநர் கடலூர் அவர்கள் என்னை தணிக்கைத் தடை பொறுப்பிலிருந்து விடுவிக்க 40% செலுத்துமாறு வாய்மொழியாக கேட்டுக் கொண்டார். எனவே மீண்டும் 20% தொகையான ரூ.2,70,788ஐ 25.01.2023ல் செலுத்தியுள்ளேன். செலுத்துச்சீட்டு எண்.407/2022-23 ஆக மொத்தம் காலங்கடந்த வரி மற்றும் வரியில்லாத இனங்களுக்காக ரூ.5,41,576 (ரூபாய் ஐந்து இலட்சத்து நாற்பத்து ஒரு ஆயிரத்து ஐநூற்று எழுபத்து ஆறு மட்டும்) செலுத்தி உள்ளேன்.

சென்னை, பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.1313/2023-2/ஊ2 நாள் 09.02.2024ல் எனக்கு பணி ஓய்வு பெற அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது. எனக்கு கடந்த மார்ச் 2022-ல் இதய வால்வு மாற்று அறுவை சிகிச்சை செய்த போது பக்கவாதம் ஏற்பட்டு, சரிவர பேச்சு வராமல் இன்றுவரை குணமடையாமல் மருத்துவக் கண்காணிப்பில் இருந்து வருகிறேன். புவனகிரி தேர்வுநிலை பேரூராட்சியில் தணிக்கை தடை நிவர்த்தி செய்ய நான் செலுத்திய தொகையை புவனகிரி தேர்வுநிலை பேரூராட்சி செய்த வசூல் தொகையிலிருந்து கிடைக்க தாங்கள் ஆவன செய்யுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 05.03.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் புவனகிரி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3. புவனகிரி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 24.03.2025 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

“கடலூர் மாவட்டம் புவனகிரி தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகத்தில் மனுதாரர் திரு. மு. திருஞானசம்பந்தம் என்பவர் கீழ்க்கண்ட காலங்களுக்கு செயல் அலுவலராக பணிபுரிந்துள்ளார்.

| வ.எண். | நிதி ஆண்டு | புவனகிரி பேரூராட்சி அலுவலகத்தில் திரு. மு. திருஞானசம்பந்தம் செயல் அலுவலராக பணிபுரிந்த காலம் |
|---|---|---|
| 1 | 2017-18 | 04.01.2018 முதல் 31.03.2018 வரை |
| 2 | 2018-19 | 01.04.2018 முதல் 31.03.2019 வரை |
| 3 | 2019-20 | 01.04.2019 முதல் 31.12.2019 வரை மற்றும் 02.03.2020 முதல் 31.03.2020 வரை |
| 4 | 2020-21 | 01.04.2020 முதல் 03.09.2020 வரை |

மனுதாரர் திரு. மு. திருஞானசம்பந்தம் என்பவர் புவனகிரி தேர்வுநிலை பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்த 2017-18, 2018-19, 2019-20 மற்றும் 2020-21

ஆண்டுகளுக்குண்டான காலங்கடந்த வரி மற்றும் வரி இல்லாத இனங்களுக்கு தணிக்கை தடையில் நிலுவை தொகையான ரூ.5,41,576/-ஐ பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி பின்னர் பேரூராட்சிகளின் இயக்குநர் சென்னை அவர்களது செயல்முறைகள் ந.க.எண்.1313/2023-2/ஊ2 நாள் 09.02.2024ன்படி பணி ஓய்வு ஆணை பெற்றுள்ளதாகவும் மேற்குறிப்பிட்ட தொகை ரூ.5,41,576/- திரும்ப பெற்றுத் தர வேண்டியும் குறிப்பிட்டுள்ளார்.

இந்நேர்வில் நாளது வரையில் பேரூராட்சி அலுவலகத்தில் குடிநீர் கட்டணம் மற்றும் வரி இல்லா இனங்கள் நிலுவைத் தொகை கீழ்க்கண்ட அட்டவணையில் தெரிவிக்கப்படுகிறது.

அட்டவணை: 01- குடிநீர் கட்டண நிலுவை தொகை விபரம்

| வ.எண். | நிதி ஆண்டு | ஆண்டு தணிக்கை தொகை ரூ. | கேட்பு நீக்கம் செய்த தொகை ரூ. | வசூல் செய்ய வேண்டிய நிலுவை தொகை ரூ. | நாளது தேதி வரை வசூல் செய்த மொத்த தொகை ரூ. | நாளது தேதி வரை உள்ள நிலுவை தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2017-18 | 5,94,150 | 14,400 | 5,79,750 | 4,62,350 | 1,17,400 |
| 2 | 2018-19 | 12,24,700 | 27,450 | 11,97,250 | 9,91,050 | 2,06,200 |
| 3 | 2019-20 | 14,15,500 | 32,600 | 13,82,900 | 10,73,200 | 3,09,700 |
| 4 | 2020-21 | 14,02,600 | 33,600 | 13,69,000 | 10,19,200 | 3,49,800 |
| | | | | | மொத்தம் | 9,83,100 |

அட்டவணை: 02- வரியில்லா இனங்கள் நிலுவை தொகை விபரம்

| வ.எண். | நிதி ஆண்டு | காலங்கடந்த ஆண்டு | ஆண்டு தணிக்கை தொகை ரூ. | நாளது தேதி வரை வசூல் செய்த மொத்த தொகை ரூ. | நாளது தேதி வரை உள்ள நிலுவை தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | 2017-18 | 2014–15 | 1,88,655 | 0 | 1,88,655 |
| 2 | 2018-19 | 2015–16 | 4,13,045 | 4,13,045 | 0 |
| 3 | 2019-20 | 2016–17 | 0 | 0 | 0 |
| 4 | 2020-21 | 2017–18 | 0 | 0 | 0 |
| | | | | மொத்தம் | 1,88,655 |

தனியர் ஓய்வு பெற தடையின்மை சான்று வழங்கும் பொருட்டே இத்தொகையினை பேரூராட்சியில் செலுத்தியுள்ளார். மேலும் இவர் பணியாற்றிய காலத்தில் வசூல் செய்யப்பட வேண்டிய வரி மற்றும் வரியில்லா நிலுவை தொகை ரூ.11,71,755/- நாளது வரை வசூலாகவில்லை. மேற்கண்ட நிலுவை தொகைகள் பேரூராட்சி அலுவலகத்தில் முழுமையாக வசூல் செய்த பின்னர்

தனியருக்கு குறுக்கோடிட்ட காசோலையாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**4.** மனுதாரரும் மற்றும் புவனகிரி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரும் 16.04.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 07.04.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திரு. மு. திருஞானசம்பந்தம், என்பவர் 16.04.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

- நான், புவனகிரி தேர்வுநிலை பேரூராட்சியில் 2017-18 முதல் 2020-21 வரையில் செயல் அலுவலராகப் பணியாற்றினேன். பின்னர் வயது முதிர்வு காரணமாக திருநெல்வேலி மாவட்டம், பணகுடி பேரூராட்சியிலிருந்து 31.01.2023 அன்று செயல் அலுவலர் பணியிலிருந்து ஓய்வு பெற்றேன்.

- இந்நிலையில், நான் புவனகிரி தேர்வுநிலை பேரூராட்சியில் 2017-18 முதல் 2020-21 வரையில் பணியாற்றிய போது காலங் கடந்த வரி மற்றும் வரியில்லாத இனங்கள் வசூலிக்க தவறி உள்ளதாக தணிக்கைத் தடையில் சுட்டிக் காட்டப்பட்டது.

- பேரூராட்சிகளின் இயக்குநர் அலுவலக எண் 10896/07/ஊ.2 நாள் 02.01.2008–ல் வெளியிட்ட ஆணையின்படி, தணிக்கை தடையில் தெரிவிக்கப்பட்ட பொது மக்களிடமிருந்து வசூலிக்க தவறிய தொகைக்கான செயல் அலுவலரின் விகிதாச்சாரம் 20% அடிப்படையில் ரூ.2,70,788/–னை 20.01.2023 அன்று செலுத்தினேன். கடலூர் உள்ளாட்சி தணிக்கைத் தடை உதவி இயக்குநரின் வாய்மொழி உத்தரவு அடிப்படையில், தணிக்கைத் தடை பொறுப்பிலிருந்து என்னை விடுவிக்கும்பொருட்டு கூடுதலாக 20% தொகையான ரூ.2,70,788/–னை 25.01.2023 அன்று செலுத்தினேன். எனவே ஆக மொத்தம் ரூ.5,41,576/–னை செலுத்தியுள்ளேன்.

- எனக்கு கடந்த மார்ச் 2022-ல் இருதய வால்வு மாற்று அறுவை சிகிச்சை செய்த போது பக்கவாதம் ஏற்பட்டு, சரிவர பேச்சு திறன் இல்லாததால் மருத்துவக் கண்காணிப்பில் இருக்கும் எனக்கு மாதந்தோறும் ரூ.10,000/–க்கும் மேலாக மருத்துவ செலவினம் ஏற்படுவதால், எனது குடும்ப சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு தணிக்கைத் தடை நிவர்த்தி செய்ய நான் செலுத்திய ரூ.5,41,576/–னை புவனகிரி தேர்வுநிலை பேரூராட்சியால் வசூல் செய்த தொகையிலிருந்து உடனடியாக கிடைப்பதற்கு ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) எதிர்மனுதாரரான புவனகிரி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் (பொறுப்பு) திரு. ஆ. மயில்வாகனன் என்பவர் 16.04.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:–

- மனுதாரர் திரு மு. திருஞானசம்பந்தம் என்பவர் புவனகிரி தேர்வுநிலை பேரூராட்சியில் செயல் அலுவலராக 2017-18, 2018-19, 2020-21 மற்றும் 2021-22 ஆகிய ஆண்டுகளில் காலங்கடந்த வரி மற்றும் வரி இல்லாத இனங்களுக்கு தணிக்கைத் தடையில் நிலுவைத்

தொகை ரூ.5,41,576-ஐ செலுத்தி பணியிலிருந்து ஓய்வு பெற்று, இத்தொகையினை திரும்ப பெற்றுத் தர வேண்டி கோரியுள்ளார்.

- மனுதாரர் புவனகிரி தேர்வுநிலை பேரூராட்சியில் பணியாற்றிய 2017-18 முதல் 2020-21 ஆண்டுகள் வரையிலான காலத்தில் வசூல் செய்யப்பட வேண்டி குடிநீர் கட்டண நிலுவைத் தொகை மற்றும் வரியில்லா இனங்களில் நிலுவைத் தொகை மொத்தம் ரூ.12,55,255/– ஆகும்.
- பேரூராட்சிகளின் இயக்குநர் அலுவலக ந.க. எண் 10896/07/ஊ.2 நாள் 02.01.2008–ல் வெளியிட்ட ஆணையின்படி, தலைமை எழுத்தர் இல்லாத பேரூராட்சிகளின் செயல் அலுவலர்களுக்கு 40% விகிதார முறைப்படி காலங் கடந்த வரியினம் ஏற்பட காரணமாக இருந்தவர்கள் மீது தொகை பிடித்தம் செய்யப்பட வேண்டும். இதன் அடிப்படையில் மனுதாரர் 40% தொகையான ரூ.5,41,576/– செலுத்தியுள்ளார்.

- மனுதாரர் புவனகிரி தேர்வுநிலை பேரூராட்சியில் பணியாற்றிய போது வசூலிக்கப்படாத வரி மற்றும் வரியில்லாத இனங்களில் மொத்த தொகையான ரூ.12,55,255/–ல், இந்நாள் வரை ரூ.1,21,300/– மட்டும் வசூலிக்கப்பட்டுள்ளது. மீதித் தொகை வசூலிக்கப்பட வேண்டும்.

- மனுதாரரின் உடல்நிலையினை கருத்தில் கொண்டு, மேற்படி வசூலிக்கப்பட்ட ரூ.1,21,300/–லிருந்து, அவர் செலுத்திய விகிதாசாரமான 40% தொகையான ரூ.48,520/–னை பேரூராட்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, ஒப்பளிப்பு அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

- மேலும், மனுதாரர் செலுத்திய மீதித் தொகையினை திரும்ப அளிக்கும் பொருட்டு, அவ்வப்போது வசூலாகும் தொகையில் 40% வழங்குவதற்கும் பேரூராட்சி மன்றத்தில் ஒரே தீர்மானமாக நிறைவேற்ற உரிய நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும் என்பதை இம்முறை மன்றநடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7) மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம் , புவனகிரி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர் திரு. மு. திருஞானசம்பந்தம் என்பவர் புவனகிரி பேரூராட்சியில் 2017-18 ஆம் நிதியாண்டு முதல் 2020-21 வரையிலான காலத்தில் செயல் அலுவலராக பணியாற்றி, 31.01.2023 அன்று வயது முதிர்வின் காரணமாக திருநெல்வேலி மாவட்டம், பணகுடி பேரூராட்சியில் செயல் அலுவலர் பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

இதற்கிடையில், 2017-18 ஆம் நிதியாண்டு முதல் 2020-21 ஆம் ஆண்டுகள் வரை புவனகிரி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலராக பணியாற்றிய காலத்தில் காலங்கடந்த வரி மற்றும் வரியில்லாத இனங்களில் வசூலிக்கப்படவில்லை என தணிக்கை அறிக்கையில் தெரிவித்து, சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மூலம் ஈடு செய்யப்பட வேண்டும் என தணிக்கை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

இந்நிலையில், மனுதாரர் திரு. மு. திருஞானசம்பந்தம், செயல் அலுவலர் பணியிலிருந்து 31.01.2023 அன்று ஓய்வு பெறவுள்ள சூழ்நிலை காரணமாக பேரூராட்சிகளின் இயக்குநர் அலுவலக ந.க.எண்.10896/07/ஊ2 நாள் 02.01.2008ல் வெளியிடப்பட்ட ஆணையின்படி, தலைமை எழுத்தர் இல்லாத புவனகிரி தேர்வுநிலை பேரூராட்சியில், காலங்கடந்த வரியினம் ஏற்பட காரணமாக இருந்த மனுதாரர் செயல் அலுவலரின் 40% விகிதார தொகையான ரூ.5,41,576 செலுத்தி பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

மனுதாரர் திரு. மு. திருஞானசம்பந்தம் என்பவர் புவனகிரி பேரூராட்சியில் 2017-18 முதல் 2020-21 ஆம் ஆண்டுகள் வரை செயல் அலுவலராக பணியாற்றிய போது வசூலிக்கப்படாத வரி மற்றும் வரியில்லாத இனங்களில் மொத்த தொகை ரூ.12,55,255 எனவும், இத்தொகையில் இந்நாள் வரை (16.04.2025 வரை) பேரூராட்சியில் வசூலிக்கப்பட்ட தொகை ரூ.1,21,300 மட்டும் எனவும் மீதி தொகை வசூலிக்கப்பட வேண்டும் என்பதையும் பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு மனுதாரரின் உடல்நிலையினை கருத்திற்கொண்டு, மனுதாரரால் வசூலிக்கப்படாத காலங்கடந்த வரி மற்றும் வரியில்லா இனங்களில் தற்போது வரை வசூலிக்கப்பட்ட ரூ.1,21,300/–லிருந்து மனுதாரர் செலுத்திய விகிதாசாரமான 40% தொகையான ரூ.48,520 மற்றும் அவ்வப்போது காலங்கடந்த வரி இனங்கள் வசூலாகும் தொகையில் 40% தொகையினை கணக்கிட்டு, மனுதாரருக்கு திரும்ப அளிப்பதற்கு புவனகிரி பேரூராட்சி மன்றத்தில் ஒரே தீர்மானம் நிறைவேற்றி ஒப்பளிப்பு செய்வதற்கான துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ள புவனகிரி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரை மேற்கண்டவாறு தொடர் நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் 25ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. மு. திருஞானசம்பந்தம்,
செயல் அலுவலர் (ஓய்வு), பேரூராட்சி துறை,
நெ.100-A, காமாட்சி அம்மன் கோவில் தெரு,
கடலூர் துறைமுகம்,
கடலூர் – 607 003.
2) செயல் அலுவலர்,
புவனகிரி தேர்வுநிலை பேரூராட்சி,
கடலூர் மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை –600 028

4) இணைஇயக்குநர்/ஒருங்கிணைப்பு அலுவலர் ( Nodal Officer)
(பெயரிடப்பட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை – 600 028

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.